முதன்மை சார்பு நீதிமன்றம், திருவண்ணாமலை

முன்னிலை : திருமதி. ஜி.எம்.வசந்தி,எம்.எல்.,

முதன்மை சார்பு நீதிபதி,

திருவண்ணாமலை.

**2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27- ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேல்முறையீட்டு வழக்கு எண். 1/2017**

லதா .....மேல்முறையீட்டாளர்/வாதி

**/எதிர்/**

புஷ்பவேல் ......எதிர்மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி

இம்மேல்முறையீடானது திருவண்ணாமலை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண் 163/2014ல் 01.06.2016 தேதியில் பிறப்பிக்கப்பட்டிருக்கும் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக அவ்வழக்கின் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அசல் வழக்கு எண் 163/2014-ன் தரப்பினர்கள்** -

லதா ......................வாதி

**/எதிர்/**

புஷ்பவேல் ..........................பிரதிவாதி

இவ்வழக்கு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 25.11.2019 அன்று விசாரனைக்கு வந்து மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.S.துரைசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.V.சரவணன் மற்றும் திரு.E.பாலாஜி ஆகியோர் ஆஜராகியும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளை கேட்டும் மேல்முறையீட்டு விவரக்குறிப்பு, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை, வழக்காவணங்கள் ஆகியவைகளை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

கீழமை நீதிமன்றமான திருவண்ணாமலை, முதன்மை மாவட்ட உரிமையியல்

நீதிமன்றத்தின் கோப்பில் உள்ள அசல் வழக்கு எண் 163/2014-ல் 01.06.2016-ல் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து இம்மேல்முறையீட்டை அனுமதிக்க வேண்டுமாய் மேல்முறையீட்டாளர்/வாதி இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்திருக்கிறார்.

**<u>2. வழக்குரை சுருக்கம்.</u>**

வழக்கு வாதிக்கும் முருகன் என்பவருக்கும் 10.02.2006ல் திருமணம் நடைபெற்றது. ஆனால், குழந்தைகள் பிறக்கவில்லை. வாதியின் கணவர் முருகன் 04.02.2014ல் இறந்துவிட்டார், அவருக்கு இந்த வாதி மட்டுமே வாரிசுதாரர் ஆவார்.

வழக்கு சொத்துக்கள் அனைத்துமே முருகனுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். அதாவது வழக்கு சொத்துக்களான 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களை, முருகன், 04.06.2009ல் ஒரு முனுசாமி கவுண்டர் மகன் வேலாயுதம் மற்றும் வேலாயுதம் மனைவி ராணி என்பவர்களிடமிருந்து தன்னுடைய சுய சம்பாத்திய வருமானத்தில் கிரயம் பெற்றார். மேலும், சர்வே எண்.12/5ல் 0.73 செண்ட் ஐ கிணற்றில் பாதி உரிமையுடன் 5HP மின் மோட்டார் கொண்ட சொத்தை வாதியின் கணவர் முருகனும், முருகனின் இளவர் சகோதரர் புஷ்பவேலுவுக்கு அவரது சகோதரர் முருகன் காப்பாளராக இருந்தும், இருவரும் சேர்ந்து ஒரு முனுசாமி மகன் அண்ணாமலை என்பவரிடமிருந்து 21.12.2001ல் கிரையம் பெற்றார்கள்.

அதேபோன்று சர்வே எண்.10/7ல் 0.33 செண்ட் ஐயும், சர்வே எண்.10/15ல் 0.39 செண்ட் ஐயும், அதாவது வழக்கு 7,8 மற்றும்9 அயிட்ட சொத்துக்களை, வாதியின் கணவர் முருகனும் முருகனின் சகோதரர் புஷ்பவேலும், ஒரு துரைசாமி மகன் வேலாயுதம் மற்றும் வேலாயுதத்தின் மகன்களான ராமசந்திரன், ஜெயசந்திரன், மூர்த்தி ஆகியோரிடமிருந்து 25.10.2004ல் கிரையம் பெற்றார்கள். அதேபோன்று சர்வே எண்.11/9ல் 0.16 செண்ட் சொத்தும், சர்வே எண்.10/12ல் 0.04-1/2 செண்ட் சொத்தும் அதாவது வழக்கு 10 மற்றும் 11 அயிட்ட சொத்தக்கள், முருகன் மற்றும் புஷ்பவேலுவின் தகப்பனாரான அண்ணாமலைக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி வழக்கு 10 மற்றும் 11 அயிட்ட சொத்துக்களை பொறுத்து தன்னுடைய இரண்டு மகன்களான முருகன் மற்றும் புஷ்பவேலுவுக்கு சரிபாகம் ஒதுக்கி அண்ணாமலை, ஒரு உயில் ஆவணத்தை 21.12.2001ல் எழுதிவைத்தார். அண்ணாமலையின் இறப்பிற்கு பின்னிட்டு வாதியின் கணவர் முருகனுக்கும், புஷ்பவேலுவுக்கும்

வழக்கு 10 மற்றும் 11 அயிட்ட சொத்தக்களில், சரிபாகம் கிடைத்திருக்கிறது. ஆகவே, வழக்கு 6 முதல் 12 அயிட்ட சொத்துக்களில், வாதியின் கணவருக்கு சரிபாதி பாகம் உள்ளது. அதை தவிர, சர்வே.எண்.11/2A ல் 0.08 செண்ட் அதாவது வழக்கு 12 வது அயிட்ட சொத்து முதல் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது. அண்ணாமலை உயில் எழுதி வைத்த 21.12.2001ல், முதல் பிரதிவாதிக்கு 17 வயது மட்டுமே ஆகும். அதேபோன்று 21.12.2001ல், கிரையபத்திரம் ஏற்பட்ட பொழுது புஷ்பவேலுவுக்கு 17 வயது மட்டுமே ஆகும். புஷ்பவேலுவுக்கு 18 வயது முடிந்த பிறகு, வழக்கு 6,7,8,9,10 மற்றும் 11 அயிட்ட சொத்துக்களில், பாதி பாகத்தை பெற்று தனிப்பட்ட முறையில், அனுபவித்து வருகிறார். அதேபோன்று, வாதியின் கணவர் முருகன், மேற்படி அயிட்ட சொத்துக்களில், பாதி பாகத்தை அனுபவித்து வந்தார். இந்நிலையில், பிரதிவாதி புஷ்பவேலு, தன்னுடைய அண்ணனான முருகன் மீது இருந்த அன்பு மற்றும் பாசத்தின் காரணமாக, வழக்கு 6 முதல் 10 அயிட்ட சொத்துக்களில் தனக்கு உள்ள பாதி பாகத்தை பொறுத்தும், வழக்கு 12 வது அயிட்ட முழு சொத்தை பொறுத்தும் 04.06.2009 ல், ஒரு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை வாதியின் கணவர் முருகன் பெயருக்கு எழுதி வைத்தார். அதை அனுசரித்து சுவாதீனமும், வாதியின் கணவர் முருகனிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன்படி, வழக்கு 6 முதல் 10 அயிட்ட முழு சொத்துக்களையும், 11 வது அயிட்ட சொத்தில் பாதி பாக சொத்தையும், 12 வது அயிட்ட முழு சொத்தையும், அதாவது வழக்கு 1 முதல் 11 அயிட்ட முழு சொத்தையும் 12 வது அயிட்ட சொத்தில் பாதி பாக சொத்தையும், வாதியின் கணவர் முருகன், அனுபவித்து வந்தார். முருகன், உயிருடன் இருந்த காலம் வரை மேற்படி சொத்துக்களுக்கு, பட்டா எண்.193, 867, 1140, 464, 249, 615 மற்றும் ‘அ’ பதிவேடு பெற்றும், அரசுக்கு வரி கட்டி அனுபவித்து வந்தார்.

முதல் பிரதிவாதி தன்னுடைய சொத்துக்களை பொறுத்து வாதியின் கணவர் முருகனுக்கு 25.10.2004ல், செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்துவிட்டதால், மேற்படி சொத்துக்களில், முதல் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. இந்நிலையில், வாதியின் கணவர் முருகன், 04.02.2014ல், இறந்துவிட்டார். வாதியின் கணவர் பெயரில் ஏற்பட்டுள்ள வரி ரசீதுகளையும், தன்னுடைய கணவரின் இறப்பு சாண்றிதழையும், தன்னுடைய பெயரிலும், தன் கணவர்

பெயரிலும் சென்னை ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில், உள்ள கூட்டு வங்கி கணக்கு ஆவணத்தையும் வாதி தாக்கல் செய்திருக்கிறார். மேற்படி ஆவணங்கள், குடும்ப அட்டை மூலம், முருகனும் இந்த வாதியும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தார்கள் என்பதும், மேற்படி சொத்துக்களில் கூட்டு சுவாதீனத்தில், இருந்தார்கள் என்பதும், நிரூபணமாகும்.

வாதியின் கணவர் முருகன் உயிருடன் இருக்கும் வரை வழக்கு சொத்து அருகில் கூட வராத பிரதிவாதி, முருகனின் இறப்பிற்கு பின்னர், 2014ஆம் ஆண்டு, மார்ச் முதல் வாரத்தில் வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ததுடன், இந்த வாதியையும் வழக்கு சொத்திலிருந்து வெளியேற்றியதால், தற்பொழுது வாதி, அவருடைய பாட்டி வீட்டில், தங்கியிருக்கிறார். வழக்கு சொத்துக்கள், பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொல்லி கொண்டு, வழக்கு சொத்தின் சுவாதினத்தை வாதி அடைய முடியாது என்றும் சொல்லி வருகிறார். ஆனால், அவ்வாறு செயல்பட பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. வாதி பலமுறை பஞ்சாயத்து செய்தும், பிரதிவாதி, வாதிக்கு வழக்கு சொத்துக்களில் உள்ள சொத்துரிமையை ஒப்புகொள்ளவேண்டும் என்றும், வழக்கு சொத்துக்களின், சுவாதீனத்தை வாதியிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும், கேட்டும், பிரதிவாதி அதற்கு ஒப்புகொள்ளவில்லை.

வாதியின் கணவர் முருகன் இறப்பிற்கு பிறகு, TN 25 AC 6030 என்ற பதிவு எண் கொண்ட டிராக்டர், வாதியின் வசம் இருந்து வந்ததையும், பிரதிவாதி 2014, மார்ச் மாதம் முதல் வாரத்தில் அத்துமீறி எடுத்துசென்றுவிட்டார். பலமுறை கேட்டும் பிரதிவாதி அதை திருப்பி கொடுக்கவில்லை. ஆகவே, வாதி வழக்கு சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை, சுவாதீனம், இடைக்கால பலன் மற்றும் வழக்கு செலவுதொகை கோரியும் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார். வழக்குப்படி அனுமதிக்க வேண்டுகிறார்.

3. பிரதிவாதி கீழமை நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இந்த நீதிமன்றத்தில், எதிர்மனுதாரர் சார்பாக திரு.C.V.S. வழக்குரைஞர், வக்காலத்து தாக்கல் செய்திருந்தாலும் மேல்முறையீட்டில், வாதுரை செய்யவில்லை.

4. கீழமை நீதிமன்றத்தில், வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, சான்றாவணங்கள் வா.சா.ஆ.1 முதல் 26 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதித் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. மனுதாரர் தரப்பு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை பரிசீலனை செய்து கீழமை நீதிமன்றம், முடிவில் வாதியின் தாவாவை தள்ளுபடி செய்து தீர்ப்புரை வழங்கியுள்ளது. அத்தீர்ப்புரையில் குறைவுற்ற வாதி இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

7. **<u>மேல்முறையீட்டிற்கான காரணங்கள்</u>**-

கீழமை நீதிமன்றம், வாதி/இம்மேல்முறையீட்டளர் தரப்பு வழக்கை சீர்தூக்கி பார்த்து தீர்ப்பு வழங்கவில்லை. இந்த மேல்முறையீட்டாளர், முருகனின் மனைவி ஆவார். அதற்கான ஆதாரங்களை, குடும்ப அட்டை, முருகனின் இறப்பு சாண்றிதழ் ஆகியவற்றை தாக்கல் செய்திருக்கிறார். வழக்கு 1 முதல் 5 அயிட்ட சொத்தக்களை வாதியின் கணவர் முருகன் 04.06.2009ல் ஒரு முனசாமி கவுண்டர் மகன் வேலாயுதம் மற்றும் ராணி ஆகியோரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்பதை கீழமை நீதிமன்றம் கவனத்தில் எடுத்துகொண்டு அவ்வாறே முடிவு செய்திருக்க வேண்டும்.

மேலும், வழக்கு 6 வது அயிட்ட சர்வே எண்.12/5ல் 0.73 செண்ட் ஐ கிணற்றில் பாதி உரிமையுடன் 5HP மின் மோட்டார் கொண்ட சொத்தை வாதியின் கணவர் முருகனும், முருகனின் இளவர் சகோதரர் புஷ்பவேலுவுக்கு அவரது சகோதரர் முருகன் காப்பாளராக இருந்தும், இருவரும் சேர்ந்து ஒரு முனுசாமி மகன் அண்ணாமலை என்பவரிடமிருந்து 21.12.2001ல் வா.சா.5ன்படி கிரையம் பெற்றார்கள் என்பதையும் கீழமை நீதிமன்றம் கவனத்தில் எடுத்துகொண்டு அவ்வாறே முடிவு செய்திருக்க வேண்டும்.

அதேபோன்று வழக்கு 7, 8, 9 வது அயிட்ட சர்வே எண்.10/7ல் 0.33 செண்ட் ஐயும், சர்வே எண்.10/15ல் 0.39 செண்ட் ஐயும், வாதியின் கணவர் முருகனும் முருகனின் சகோதரர் புஷ்பவேலும், ஒரு துரைசாமி மகன் வேலாயுதம் மற்றும் வேலாயுதத்தின் மகன்களான ராமசந்திரன், ஜெயசந்திரன், மூர்த்தி ஆகியோரிடமிருந்து 25.10.2004ல் வா.சா.6ன்படி,

கிரையம் பெற்றார்கள் என்பதையும் கீழமைநீதிமன்றம் கவனத்தில் எடுத்துகொண்டு அவ்வாறே முடிவு செய்திருக்க வேண்டும். அதேபோன்று சர்வே எண்.11/9ல் 0.16 செண்ட் சொத்தும், சர்வே எண்.10/12ல் 0.04.1/2 செண்ட் சொத்தும் அதாவது வழக்கு 10 மற்றும் 11 அயிட்ட சொத்தக்கள், முருகன் மற்றும் புஷ்பவேலுவின் தகப்பனாரான அண்ணாமலைக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி வழக்கு 10 மற்றும் 11 அயிட்ட சொத்துக்களை பொறுத்து தன்னுடைய இரண்டு மகன்களான முருகன் மற்றும் புஷ்பவேலுவுக்கு சரிபாகம் ஒதுக்கி அண்ணாமலை, ஒரு உயில் ஆவணத்தை 21.12.2001ல் வா.சா.ஆ.7ன்படி, எழுதிவைத்தார், என்பதையும், கீழமை நீதிமன்றம், கவனத்தில், எடுத்துகொண்டு அவ்வாறே முடிவு செய்திருக்க வேண்டும். ஆனால், கீழமை நீதிமன்றம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி, ஆட்சேபணை தெரிவிக்காதநிலையில், வா.சா.ஆ.7ஐ வாதி நிருபிக்கவில்லை என்று முடிவு செய்திருப்பது, ஏற்புடையதல்ல.

மேலும், சர்வே.எண்.11/2A ல் 0.08 செண்ட் அதாவது வழக்கு 12 வது அயிட்ட சொத்து முதல் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது, என்பதையும், கீழமை நீதிமன்றம் கவனத்தில் எடுத்துகொண்டு, அவ்வாறே முடிவு செய்திருக்கவேண்டும். அண்ணாமணை உயில் எழுதி வைத்த 21.12.2001ல், முதல் பிரதிவாதிக்கு 17 வயது மட்டுமே என்பதையும், அதேபோன்று 21.12.2001ல், கிரையபத்திரம் ஏற்பட்ட பொழுது முதல் பிரதிவாதிக்கு 17 வயது மட்டுமே என்பதையும், கீழமை நீதிமன்றம் கவனத்தில் எடுத்துகொண்டு, அவ்வாறே முடிவு செய்திருக்கவேண்டும்.

மேலும், பிரதிவாதி புஷ்பவேலு, தன்னுடைய அண்ணனான முருகன் மீது இருந்த அன்பு மற்றும் பாசத்தின் காரணமாக, வழக்கு 6 முதல் 10 அயிட்ட சொத்துக்களில் தனக்கு உள்ள பாதி பாகத்தை பொறுத்தும், வழக்கு 12 வது அயிட்ட முழு சொத்தை பொறுத்தும் 04.06.2009 ல், ஒரு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை வாதியின் கணவர் முருகன் பெயருக்கு எழுதி வைத்தார் என்பதையும், அதை அனுசரித்து சுவாதீனமும், வாதியின் கணவர் முருகனிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதையும், அதன்படி, வழக்கு 6 முதல் 10 அயிட்ட முழு சொத்துக்களையும், 11 வது அயிட்ட சொத்தில் பாதி பாக சொத்தையும், 12 வது அயிட்ட முழு சொத்தையும், அதாவது வழக்கு 1 முதல் 11 அயிட்ட முழு சொத்தையும் 12 வது

அயிட்ட சொத்தில் பாதி பாக சொத்தையும், வாதியின் கணவர் முருகன், அனுபவித்து வந்தார் கீழமை நீதிமன்றம் கவனத்தில் எடுத்துகொண்டு, அவ்வாறே முடிவு செய்திருக்கவேண்டும்.

அதேபோன்று, முருகன், உயிருடன் இருந்த காலம் வரை மேற்படி சொத்துக்களுக்கு, பட்டா எண்.193, 867, 1140, 464, 249, 615 மற்றும் 'அ' பதிவேடு பெற்றும், அரசுக்கு வரி கட்டி அனுபவித்து வந்தார் என்பதையும், முதல் பிரதிவாதி தன்னுடைய சொத்துக்களை பொறுத்து வாதியின் கணவர் முருகனுக்கு 25.10.2004ல், செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்துவிட்டதால், மேற்படி சொத்துக்களில், முதல் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதையும், இந்நிலையில், வாதியின் கணவர் முருகன், 04.02.2014ல், இறந்துவிட்டார் என்பதையும், வாதியின் கணவர் பெயரில் ஏற்பட்டுள்ள வரி ரசீதுகளையும், தன்னுடைய கணவரின் இறப்பு சாண்றிதழையும், தன்னுடைய பெயரிலும், தன் கணவர் பெயரிலும் சென்னை ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில், உள்ள கூட்டு வங்கி கணக்கு ஆவணத்தையும் வாதி தாக்கல் செய்திருக்கிறா என்பதையும், மேற்படி ஆவணங்கள், குடும்ப அட்டை மூலம், முருகனும் இந்த வாதியும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தார்கள் என்பதும், மேற்படி சொத்துக்களில் கூட்டுசுவாதீனத்தில், இருந்தார்கள் என்பதையும், கீழமை நீதிமன்றம் கவனத்தில் எடுத்துகொண்டிருக்க வேண்டும்.

அதேபோன்று, வாதியின் கணவர் முருகன் உயிருடன் இருக்கும் வரை வழக்கு சொத்து அருகில் கூட வராத பிரதிவாதி, முருகனின் இறப்பிற்கு பின்னர், 2014ஆம் ஆண்டு, மார்ச் முதல் வாரத்தில் வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ததுடன், இந்த வாதியையும் வழக்கு சொத்திலிருந்து வெளியேற்றியதால், தற்பொழுது வாதி, அவருடைய பாட்டி வீட்டில், தங்கியிருக்கிறார் கீழமை நீதிமன்றம் கவனத்தில் எடுத்துகொண்டிருக்க வேண்டும். வழக்கு சொத்துக்கள், பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொல்லி கொண்டு, வழக்கு சொத்தின் சுவாதினத்தை வாதி அடைய முடியாது என்றும் சொல்லி வருகிறார் என்பதையும், ஆனல், அவ்வாறு செயல்பட பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதையும், வாதி பலமுறை பஞ்சாயத்து செய்தும், பிரதிவாதி, வாதிக்கு வழக்கு சொத்துக்களில் உள்ள சொத்துரிமையை ஒப்புகொள்ளவேண்டும் என்பதையும், வழக்கு சொத்துக்களின், சுவாதீனத்தை வாதியிடம் ஒப்படைக்க கடமைபட்டுள்ளார் என்பதையும்,

வாதியின் கணவர் முருகன் இறப்பிற்கு பிறகு, TN 25 AC 6030 என்ற பதிவு எண் கொண்ட டிராக்டர், வாதியின வசம் இருந்து வந்ததை, பிரதிவாதி 2014, மார்ச் மாதம் முதல் வாரத்தில் அத்துமீறி எடுத்துசென்றுவிட்டார் என்பதையும், பலமுறை கேட்டும் பிரதிவாதி அதை திருப்பி கொடுக்கவில்லை என்பதையும், கீழமை நீதிமன்றம் கவனத்தில் எடுத்துகொண்டிருக்க வேண்டும். வாதியும், வாதியின் மாமியாரான கஸ்தூரியும், இறந்த முருகனுக்கு வாரிசுகள் என்ற நிலையில், வேண்டுமென்றே கஸ்தூரி பெயரை மறைக்கவில்லை என்பதையும், வாரிசுசாண்றிதழ் தாக்கல் செய்துள்ளதையும், கீழமை நீதிமன்றம் கவனத்தில் எடுத்துகொள்ளவில்லை. வாதியின் மாமியாரான கஸ்தூரி வழக்கு சொத்தில் எவ்வித உரிமையும் கோரவில்லை, இந்த வாதியுடன், நட்புடனேயே இருந்துவருகிறார் என்பதையும் கீழமை நீதிமன்றம் கவனத்தில், எடுத்துகொண்டிருக்க வேண்டும். இடைமனுவில், வாரிசுசாண்றிதழ் தாக்கல் செய்துள்ளதை இந்நீதிமன்றம் ஏற்றுகொள்ள வேண்டும். பிரதிவாதியால் மட்டுமே வாதியின் சொத்தின் உரிமைக்கும் அனுபவத்திற்கும் இடையூறு என்பதால், பிரதிவாதியை மட்டுமே வழக்கில், தரப்பினராக சேர்த்துள்ளார் என்பதையும், வாதியன் மாமியாரான கஸ்தூரியை தரப்பினராக சேர்க்காததற்கு வேறு காரணம் இல்லை என்பதையும், கீழமை நீதிமன்றம் கவனத்தில், எடுத்துகொண்டிருக்க வேண்டும்.

ஆகவே, இம் மேல்முறையீட்டை அனுமதித்து, கீழமைநீதிமன்ற O.S.No.163/2014ல் 01.06.2016ல் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்யவேண்டுமாய் இந்த, மேல்முறையீட்டாளர்/வாதி பிரார்திக்கிறார்.

8. <u>ஆய்வுக்குரிய பிரச்சினை</u>-

இம்மேல்முறையீடு அனுமதிக்கப்படதக்கதா?

<u>பிரச்சினைக்கு தீர்வு</u>-

9. இவ்வழக்கில் கீழமை நீதிமன்றத்தில் வாதி லதா த/பெ முருகன் அசல் வழக்கு 163/2014-ஐ தாக்கல் செய்து அந்த வழக்கில் வழக்குச் சொத்துக்களாக அயிட்டம் 1 முதல் 12 காண்பித்து அதில் அயிட்டம் 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களை வாதியின் கணவர் முருகன், 04.06.2009 தேதியில் வேலாயுதம் மற்றும் ராணி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதாகச்

சொல்லி கிரையப் பத்திரம் தாக்கல் செய்து அந்த கிரைய ஆவணம் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வா.சா.ஆ.1 முதல் 5 அயிட்ட சொத்துக்கள் அதாவது சர்வே எண் 10/4 ஏக்கர் 0.77 செண்ட், சர்வே எண் 10/5 ஏக்கர் 0.84 செண்ட், சர்வே எண் 10/6 0.27 செண்ட் மற்றும் அதே 10/6 சர்வே எண்ணில் 0.55 செண்ட் மற்றும் சர்வே எண் 10/8-ல் 0.41 செண்ட் மொத்தம் ஏக்கர் 2.84 செண்ட் என்ற சொத்தை வாதியின் கணவர் முருகன் தனிப்பட்ட முறையில் சுயசம்பாத்தியத்தில், கிரையம் வாங்கியிருக்கிறார் என்ற சங்கதி மேற்படி வா.சா.ஆ-4-ன் படி நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த சங்கதியை மறுத்து பிரதிவாதி கீழமை நீதிமன்றத்தில் ஆஜராகி மறுப்பு தெரிவிக்கவில்லை, மேலும், தன் தரப்பு ஆட்சேபனையையும் தெரிவிக்கவில்லை. அதாவது பிரதிவாதி தோன்றாத்தரப்பினராகியிருக்கிறார். ஆகவே, வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.4-ன் படி வழக்கு 1 முதல் 5 அயிட்ட சொத்துக்கள் வாதியின் கணவர் முருகன் தன்னுடைய சுயசம்பாத்தியத்தில் கிரையம் வாங்கிய தனிப்பட்ட சொத்துக்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி சொத்துக்கள் தொடர்பாக முருகன் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா, "அ" பதிவேடு, நில வரி ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மேற்படி சொத்துக்களில் முருகனின் சுவாதீனம் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மேற்படி 1 முதல் 5 அயிட்ட சொத்துக்கள் வா.சா.ஆ.4 கிரையப் பத்திரப்படி வாதியின் கணவர் முருகன் இறந்துவிட்டதால் முருகனின் வாரிசு என்ற அடிப்படையில் வாதி முழு உரிமையாளர் என்று உரிமையை பெறுவதற்கு எவ்வித தடையும் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

10. அடுத்ததாக, வழக்கு 6வது அயிட்ட சொத்தான சர்வே எண் 12/5, 0.73 செண்ட் சொத்தையும், அதில் உள்ள கிணறு 5 எச்.பி. மின் மோட்டார் பம்ப்செட், மின் இணைப்பு எண் 116, இதில் பாதி பாகம் என்ற சொத்தையும், 7,8,9 அயிட்ட சொத்துக்களான முறையே சர்வே எண் 10/7-ல் 0.33 செண்ட்டையும் சர்வே எண் 10/14-ல் 0.34 செண்ட்டையும், சர்வே எண் 10/15-ல் 0.33 செண்ட்டையும், வாதியின் கணவர் முருகனும், முருகனின் சகோதரரான பிரதிவாதி புஷ்பவேலும் கிரையம் வாங்கியிருக்கிறார்கள் என்பது மேற்படி வா.சா.ஆ.5/ 21.12.2001 தேதிய கிரையப் பத்திரப்படியும், வா.சா.ஆ-6/25.10.2004 தேதிய கிரையப்

பத்திரப்படியும், நிரூபிக்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கதியை வாதியும் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆகவே, வழக்கு 6,7,8,9 அயிட்ட சொத்துக்களில், வாதியின் கணவர் முருகனுக்கு பாதி பாகமும், முருகனின் சகோதரரான புஷ்பவேலுக்கு பாதி பாகம் உரிமையுள்ளது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

11. அடுத்ததாக, வழக்கு 10வது அயிட்ட சொத்தான சர்வே எண் 11/9 -0.16 செண்ட்டையும், 11வது அயிட்ட சொத்தான 0.34-ல் 0.04 1/2 இதில் உள்ள கூரைவீட்டில் பாதி பாகம் என்ற சொத்தை வாதியின் கணவர் முருகன் மற்றும் பிரதிவாதியின் தகப்பனாரான அண்ணாமலைக்கு ஆரம்பத்தில் பாத்தியமாக இருந்து மேற்படி அண்ணாமலை இவ்வழக்குச் சொத்தான அயிட்டம் 10 மற்றும் 11 சொத்துக்களை வாதியின் கணவர் முருகனுக்கும், பிரதிவாதி புஷ்பவேலுக்கும் சம பாகம் பிரித்து 21.12.2001-ல் உயில் ஆவணம் எழுதி வைத்தாகவும், அந்த உயில் ஆவணம் வா.சா.ஆ-7 என்றும், அதேபோல வழக்கு 12வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண் 11/12A, 0.08 செண்ட் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும், இந்நிலையில் பிரதிவாதி வழக்கு 6,7,8,9,10 ஆகிய சொத்துக்களில் தனக்குள்ள பாதி பாகத்தைப் பொறுத்தும், வழக்கு 12வது அயிட்ட சொத்தைப் பொறுத்து முழு சொத்தையும் பிரதிவாதி அவரது சகோதரர் மற்றும் வாதியின் கணவரான முருகனுக்கு வா.சா.ஆ.8 04.06.2009 தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதிக்கொடுத்துவிட்டதாகவும், அதுமுதல் வழக்கு முழு சொத்துக்களையும் வாதியின் கணவர் முருகன் வா.சா.ஆ-9 முதல் வா.சா.ஆ.25 வரையிலான பட்டா, "அ" பதிவேடு நிலவரி ரசீது பெற்று வரி செலுத்தியும், வங்கியில் கூட்டாக கணக்கு வைத்தும், வாதியின் கணவர் முருகன் முழு உரிமையாளர் என்ற அடிப்படையில் அனுபவித்து வந்து 04.02.2014ல் இறந்துவிட்டார் என்றும், வாதிதான் ஒரே வாரிசுதாரர் என்றும் சொல்லப்பட்டு வழக்கு 6 முதல் 12 அயிட்ட சொத்துக்களுக்கும் முருகனின் வாரிசுதாரர் என்ற அடிப்படையில் வாதி முழு உரிமையாளர் என்று விளம்புகைப் பரிகாரமும் மற்றும் சொத்து சுவாதீன பரிகாரமும் வாதி கோரியிருக்கிறார். வழக்கு 6 முதல் 12 அயிட்ட சொத்துக்களில் வா.சா.ஆ.5-ன் படி 6வது அயிட்ட சொத்தை வாதியும் முதல் பிரதிவாதியும் கிரையம் வாங்கிய வகையில், வாதியின்

கணவர் முருகனுக்கு பாதி பாகமும், பிரதிவாதிக்கு பாதி பாகமும் உரிமை உள்ளது. அதேபோன்று வா.சா.ஆ.6-ன் படி வழக்கு 7,8,9 அயிட்ட சொத்துக்களில் வாதியின் கணவர் முருகனுக்கு பாதி பாகமும், பிரதிவாதிக்கு பாதி பாகமும் உரிமை உள்ளது. இந்நிலையில், வாதி கீழமை நீதிமன்றத்தில் வா.சா.1 ஆக இருந்து சாட்சியமளிக்கும்போது வழக்கு 6,7,8,9,10,12 ஆகிய சொத்துக்களைப் பொறுத்து அவருக்குரிய பாதி பாகத்தைப் பொறுத்து வாதியின் கணவர் முருகனுக்கு வா.சா.ஆ.8 04.06.2009 தேதியில் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்துவிட்டார் என்று சொல்லி விளம்புகைப் பரிகாரம் கோரியிருக்கிறார். இந்த சங்கதி குறித்து பிரதிவாதி ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றாலும் கூட, மேற்படி சொத்துக்களைப் பொறுத்து வா.சா.ஆ.5,6 கிரையப் பத்திரங்கள் வாதியின் கணவர் முருகன் மற்றும் பிரதிவாதி பெயரில் இருப்பதாலும், அதேபோன்று வழக்கு 12வது அயிட்ட சொத்து பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட சொத்து என்று வாதியே ஒப்புக்கொண்டிருப்பதாலும், மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தை நிரூபிக்க அதில் கண்டுள்ள சாட்சிகளைக் விசாரித்துக்கொண்டு தன் தரப்பு வழக்கை நிரூபிக்க வேண்டிய கடப்பாடு வாதிக்கு உள்ளது. அதேபோல, வா.சா.ஆ-5,6 சம்பந்தப்பட்ட சொத்துக்களுக்கும், 12வது அயிட்ட சொத்திற்கும் பட்டா உள்பட வருவாய் ஆவணங்களை முருகன் பெயருக்கு மாற்றம் செய்து கொள்வதற்கு பிரதிவாதி வருவாய் அதிகாரிக்கு உரிய பெயர் மாற்ற ஆவணங்களில் கையொப்பம் செய்துகொடுத்தார் என்ற சங்கதியை நிரூபிக்கும் முகமாக வாதி சாட்சிகளை விசாரித்துக்கொள்ளவில்லை. குறிப்பாக வாதி வழக்குச் சொத்தின் சுவாதீனம் பிரதிவாதியிடம் இருப்பதை ஒப்புக்கொண்டு, சுவாதீன பரிகாரம் கோரியுள்ள நிலையில், வா.சா.ஆ-5,6 சம்பந்தப்பட்ட சொத்துக்களைப் பொறுத்தும், 12வது அயிட்ட முழுச் சொத்தைப் பொறுத்தும் மேலே சொல்லியுள்ளவாறு சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரிக்கவும், ஆவணங்களை தாக்கல் செய்யவும், வாதி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் வாதிக்கு விளம்புகைப் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

12. அதேபோன்று வாதியின் கணவர் முருகன் மற்றும் பிரதிவாதியின் தகப்பனார் அண்ணாமலை, முருகனுக்கும் பிரதிவாதிக்கும் எழுதி வைத்ததாக சொல்லப்படும் வா.சா.ஆ.7

21.12.2001 தேதிய உயில் ஆவணத்தை நிரூபிக்கும்பொருட்டு அதில் கண்டுள்ள சாட்சிகளையும் விசாரித்துக்கொள்வதற்கு வாதி முன்வரவில்லை. மேலும், வா.சா.ஆ-10,11 சம்பந்தப்பட்ட சொத்துக்களுக்கும், பட்டா உள்பட வருவாய் ஆவணங்களை முருகன் பெயருக்கு மாற்றம் செய்து கொள்வதற்கு பிரதிவாதி வருவாய் அதிகாரிக்கு உரிய பெயர் மாற்ற ஆவணங்களில் கையொப்பம் செய்துகொடுத்தார் என்ற சங்கதியை நிரூபிக்கும் முகமாக வாதி சாட்சிகளை விசாரித்துக்கொள்ளவில்லை. குறிப்பாக வாதி வழக்குச் சொத்தின் சுவாதீனம் பிரதிவாதியிடம் இருப்பதை ஒப்புக்கொண்டு, சுவாதீன பரிகாரம் கோரியுள்ள நிலையில், வா.சா.ஆ-10,11 சம்பந்தப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து தகுந்த சாட்சிகளை விசாரிக்க வாதி நடவடிக்கை எடுக்காததால், வாதிக்கு வழக்கு 10 முதல் 11 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து விளம்புகைப் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

13. இவ்வழக்கில், இதர ஆவணங்கள் என்பது, வா.சா.ஆ-1,2,3 ஆகிய ஆவணங்கள். அவை, வாதிக்கும் முருகனுக்கும் நடைபெற்ற திருமணத்தை நிரூபிக்கக்கூடிய திருமண பத்திரிக்கை, குடும்ப அட்டை, 04.02.2014 தேதிய முருகன் இறப்புச் சான்றிதழ் ஆகும். மேற்படி ஆவணங்களைப் பொறுத்து பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்ப்பு தெரிவிக்காத நிலையில், இறந்த முருகனின் மனைவி இந்த வாதி லதா என்பது நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், அதேபோன்று, மேற்கண்ட பரிசீலனையிலிருந்தும், வா.சா.ஆ.4 கிரையப் பத்திரப்படி வழக்கு 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களை வாதியின் கணவர் முருகன் வேலாயுதம் மற்றும் ராணி ஆகியோரிடமிருந்து 04.06.2009 தேதியில் தன்னுடைய சுயசம்பாத்தியத்தில் கிரையம் முறையில் வாங்கியிருக்கிறார் என்ற நிலையில், அதை மறுத்து பிரதிவாதி ஆட்சேபனை செய்து அதில் தனக்கும் பாகம் உண்டு என்று எவ்வித உரிமையும் இருப்பதாக ஆட்சேபனை செய்யாத நிலையிலும், அத்தகைய உரிமை இருப்பதாகச் சொல்லி ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யாததாலும், முருகனின் வாரிசு/மனைவி என்ற அடிப்படையில், வழக்கு 1 முதல் 5 அயிட்ட சொத்துக்கள் வாதிக்கு முழு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், இதர வழக்கு 6 முதல் 12 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து கீழமை நீதிமன்றத்தில் சொல்லியுள்ளது போல வாதியின் முழு உரிமையை நிருப்பிப்பதற்கு வா.சா.ஆ.7 உயில்

ஆவணத்தைப் பொறுத்தும், வா.சா.ஆ.8 தான செட்டில்மெண்ட் ஆவணத்தைப் பொருட்டும், அதில் கண்டுள்ள சாட்சிகளை விசாரிப்பதற்கும் வருவாய் அதிகாரிகளை விசாரிப்பதற்கும், வாதி முன் வரவில்லை என்பதால், வாதிக்கு 6 முதல் 12 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து, முழு உரிமையைப் பொறுத்து வாதிக்கு விளம்புகை மற்றும் சுவாதீனப் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

14. இவ்வழக்கில் வாதிக்கு வழக்கு 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து முழு உரிமையைப் பொறுத்து விளம்புகைப் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்பதும் மேற்படி வழக்கு 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து வாதிக்கு சுவாதீனப் பரிகாரமும் கிடைக்கத்தக்கது என்றும், வழக்கு 1 முதல் 5 அயிட்ட சொத்துக்கள் சம்பந்தப்பட்ட இடைக்கால மற்றும் எதிர்கால பலன் குறித்து வாதி தனியாக மனு செய்துகொள்ள வேண்டும் என்று முடிவு காணப்படுகிறது.

முடிவில், இம்மேல்முறையீடு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, திருவண்ணாமலை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு 163/2014-ல் 01.06.2016-ல் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை மாற்றியமைக்கப்படுகிறது. வழக்கு 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து வாதி/மேல்முறையீட்டாளர் கோரியவாறு விளம்புகை மற்றும் சுவாதீனப் பரிகாரம் வழங்கப்படுகிறது. சுவாதீனம் ஒப்படைப்பதற்கு பிரதிவாதிக்கு 2 மாத காலம் அவகாசம் வழங்கப்படுகிறது. இடைக்கால, எதிர்கால பலன் குறித்து வாதி, தனியாக மனு தாக்கல் செய்துகொள்ள வேண்டும். வழக்கு 6 முதல் 12 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து வழக்கு/மேல்முறையீடு, தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்த பின்னர் 2020ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 27ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

Sd/-G.M. Vasanthi,
**முதன்மை சார்பு நீதிபதி,**
**திருவண்ணாமலை.**